செய்திப் பணிப்பாளர் / செய்தியாசிரியர் மார்ச் 29, 2018

# செய்தி வெளியீடு

## இலங்கைத் தொழிற்பல அளவீடு – 4வது காலாண்டு 2017

**தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய பொருளாதார கொள்கை விவகார அமைச்சு**

**தொலைபேசி இல: 011 – 2147446 தொலைநகல்: 011 – 2147447 மின்னஞ்சல்: sample.survey@statistics.gov.lk**

இலங்கை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது 2017இன் நாண்காம் காலாண்டுக்கான (ஒக்டோபர், நவம்பர், டிசம்பர்) இலங்கை தொழிற்பல அளவீட்டுக்கான முடிவுகளை வெளியிட்டிருந்திருக்கின்றது.

இலங்கைத் தொழிற்பல அளவீடானது இலங்கையின் வேலை செய்வோர், வேலையற்றோர் மற்றும் தொழிற்பலத்தின் மட்டங்கள், போக்குகளை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் அளவீடு, 1990 முதலாம் காலாண்டிலிருந்து காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றது. 2017ம் ஆண்டு நாண்காம் காலாண்டு தொழிற்பல அளவீடானது முழு நாட்டையும் உள்ளடக்குகின்ற 6440 வீட்டுக் கூறுகளின் மாதிரியை அடிப்படையில் கொண்ட, காலாண்டு ரீதியான அளவீட்டுத் தொடரின் 105வது வட்டமாகும்.

இலங்கையிலுள்ள நபரொருவரின் தொழில் புரியும் வயதானது 15ம் அதற்கு மேலும் என வரையறுக்கப்பட்டுகின்றது. 2017இன் நாண்காம் காலாண்டிற்கான மதிப்பிடப்பட்ட தொழில் புரியும் வயது குடித்தன சனத்தொகையானது கிட்டத்தக்க 15.9 மில்லியனாகும்.

அவதானிப்பு வாரத்தின் போது தொழில் புரியும் அல்லது தொழிற்றவர்களான மொத்த தொழில் புரியும் வயதையுடைய சனத்தொகையினர், பொருளாதார ரீதியில் செயல்திறன் மிக்க சனத்தொகை அல்லது நாட்டின் தொழிற்பலம் என இனங்காணப்படுகின்றனர். மதிப்பிடப்பட்ட பொருளாதார ரீதியில் செயல்திறன் மிக்க சனத்தொகை, 2017இன் நாண்காம் காலாண்டில் 63.6 சதவீதம் ஆண்களையும் 36.4 சதவீதம் பெண்களையும் உள்ளடக்கியவாறு ஏறத்தாழ 8.6 மில்லியனாகும்.

தொழில் புரியும் வயதையுடைய (15 வயதும் அதற்கு மேலும்) சனத்தொகையின் சதவீதமாக வெளிப்படுத்தப்படும் தொழிற்பல சனத்தொகையினரே தொழிற்பல பங்களிப்பு வீதமாகும். 2017இன் நாண்காம் காலாண்டுக்கான முழுமொத்த தொழிற்பல பங்களிப்பு வீதம் 54.1 சதவீதமெனவும் அதில் 74.9 சதவீதம் ஆண்கள் எனவும் 36.4 சதவீதம் பெண்கள் எனவும் அளவீட்டுப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன.

அளவீட்டு திகதிக்கு முன்னேயுள்ள கிழமையில் ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது சம்பளம் பெறும் பணியாளர்களாக, பணி கொள்வோராக, சுய தொழில் புரிவோராக அல்லது குடும்ப வேலையாட்களாகப் பணி புரியும் நபர்கள் அனைவரும் தொழில் புரிவோராகக் கொள்ளப்படுவர். இக் காலாண்டுக்கான மதிப்பிடப்பட்ட தொழில் புரியும் சனத்தொகை ஏறத்தாழ 8.3 மில்லியன் ஆகும். இதில் சேவைத் துறையில் ஈடுபடுவோர் ஏறத்தாழ 44.7 சதவீதமும் கைத்தொழில் துறையில் 28.3 சதவீதமும் மற்றும் 27.0 சதவீதமானோர் விவசாயத்துறையில் உள்ளனர். அதிகூடிய வேலை வாய்ப்புப் பங்களிப்பை சேவைத் துறை கொண்டுள்ளதுடன் இப்போக்கானது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் பார்க்கப்பட முடியும். குறைந்த வேலை வாய்ப்புப் பங்களிப்பானது விவசாயப் பிரிவிற்காக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் தொழில் புரியும் சனத்தொகையில் ஏறத்தாழ 67.9 சதவீதத்தினர் வாரம் ஒன்றில் 40 மணிக்கும் மேலாகப் பணியாற்றுகின்றனர் எனவும் அளவீடு வெளிப்படுத்துகின்றது.

குறித்த காலப் பகுதியில் வேலை செய்யாதோரும், வேலை தேடிக் கொண்டிருப்போரும், கடந்த நான்கு வாரங்களில் வேலை தேட நடவடிக்கை எடுத்துள்ளோரும் மற்றும் எதிர்வரும் இரு வார காலப் பகுதியில் வேலை வாய்ப்பைப் பெற்றால் புரியத் தயாராயிருப்போரும் வேலையற்றோர் எனக் கொள்ளப்படுவர். மொத்த தொழிற்பலத்திற்கு வேலையற்ற சனத்தொகையின் விகிதாசாரமானது வேலையற்றோர் வீதமாக வரையறுக்கப்படுகின்றது. 2017இன் நாண்காம் காலாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வேலையற்றோர் 4.0 சதவீதமாகும்.

2017இன் நாண்காம் காலாண்டுக்கான தொழிற்பல மதிப்பீடுகளின் தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட செய்தி அறிக்கையொன்றானது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளமான www.statistics.gov.lk இல் வெளியிடப்பட்டிருந்திருக்கின்றது என தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் நாயகம், ஜ. ஆர். இந்துபண்டார கூறினார்.